TENAGA NASIONAL
Better. Brighter.

| | | | |
|---|---|---|---|
| Headline | HSBB facilities to cover 16,000 Melaka premises next year | | |
| MediaTitle | Malaysian Nanban | | |
| Date | 07 Sep 2019 | Language | Tamil |
| Circulation | 65,000 | Readership | 415,000 |
| Section | News | Page No | 12 |
| ArticleSize | 194 cm² | Journalist | NULL |
| PR Value | RM 3,386 | | |
| | | | |




# மலாக்காவில் 16,000 இடங்களுக்கு அதிவேக இணையம் விரிவுப்படுத்தப்படும்

(கவிஅரசன் அன்பரசன்)

மலாக்கா, செப். 7-

அதிவேக அகண்ட அலை வரிசை (எச்.எஸ்.பி.பி) சேவைகள் அடுத்த ஆண்டு முதல் காலாண்டில் தேசிய ஆப்டிகல் ஃபைபர் மற்றும் இணைப்பு (என்.எஃப்.சி.பி) பைலட் திட்டத்தின் மூலம் மாநில முழுவதும் 16,000 இடங்களுக்கு இணைய . பயன்பாடு விரிவுபடுத்தப்படும்.

இளைஞர் மற்றும் விளையாட்டு மேம்பாடு, பல்லூடக அரசு சாரா அமைப்பின் தலைவரும் ஆட்சிக்குழு உறுப்பினருமான கேர் சீயி கூறுகையில், எச்.எஸ்.எஸ்.பி உள்கட்டமைப்புப் பகுதியான அலோர் காஜா (8,200), ஜாசின் (2,700) மற்றும் மத்திய மலாக்கா (4,000) கட்டங்கட்டமாக கட்டப்படும் என கேர்க் தெரிவித்தார். கடந்த ஆண்டு இங்குள்ள ஜாசினில் உள்ள பல பகுதிகளில் தொலைத் தொடர்பு வாரியம் (டி.என்.பி) செயல்படுத்திய என்.எஃப்.சி.பி பைலட் திட்டத்தின் மூலம் 1,100 இடங்களில் எச்.எஸ்.பி.பி வசதிகளைப் பெற்றுள்ளன.

முதல்கட்டமாக அலோர்காஜா மற்றும் ஜாசின் மாவட்டத்தில் அதிவேக இணையத்தின் விரிவாக்கம் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறத்திற்கும் உடனடியாக விரிவுபடுத்துவதாக அவர் தெரிவித்தார். இதற்கிடையில் என்எப்சிபியின் கீழ் மலேசியாவிலேயே முதன் முதலாக ஜாசினில் உள்ள ஃபெல்டா கெமெண்டோர் நிறுவனத்தில் இச்சேவை தொடங்கப்பட்டு வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றது.



இந்த விரிவாக்கத்தின் வழி மக்களுக்கும் இளைஞர்களுக்கும் பயனளிக்கும் வகையில் பொழுது போக்கு பயன்பாட்டிற்கும் இணையத்தின் பயன்பாடு அவசியம் தேவைப்படுகின்றது என்றார் கேர்க். தகவல் தொழில்நுட்ப நுட்பங்களும் கணிசமாக அதிகரித்து வருகிறது.

Powered by: iSENTIA